# <u>கொஞ்சம் ஈரம்</u>

உறவுகள் அறுபட்டுப் போயின...
உணர்வுகள் மரத்து மாதங்களாயின
மார் காய்ந்த பெண்களால்
குழந்தைகள் பால் மறந்தன.....!

ஷெல் சத்தத்தில் செவிப்பறை
கிழிந்து , காற்றில் கதவறைந்தாலும்
குலை நடுங்குகிறது...!
சிதறிக்கிடக்கும் பிணக்குவியலில்
எது தாய்....? எது தந்தை...?

எங்கும் ஒருவித அமைதி......!
அகப்பட்ட அகதி முகாமில் ,
தொலைத்த குழந்தையின் இருப்பிற்கு
இல்லை முகாந்திரம்......!

என்றேனும் ஒருநாள் இருள் விலகும் என
காத்திருந்ததில்....,
நிரந்தர இருள் சூழ்ந்தது....!

இனியும் வேண்டாம்...! ஈழம்.....!
கொஞ்சம் ஈரம் மட்டும் போதும்.....!
போதும்....தமிழகத் தமிழனின் இரக்கம்...!
உங்களுக்கு உங்கள் கவலை பல இருக்கும்.

ஆம்...!
ஐ.பி.எல் , இடைத்தேர்தல் பிரியாணி ,
இன்ன பிற நாலாந்தர
திரைப்பட விமர்சனங்களும்.....!!!

--- பிரநேசம்.

pranesam@yahoo.com
http://pradeepnesam.tamilblogs.com